
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ சித்திரை 1980 ★ இதழ் - 52

## மில்க்வைற் தாபகர் தினம்

மில்க்வைற் தொழிலகத் தாபகர் - தந்தையார் வீ. மு. கந்தையா பிள்ளை அமரரான திதி தோழமை நெறியில் தாபகர் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பெறுவதாகும். இந்நாள் குடும்பத் தாரையும் சுற்றத்தவரையும், அயலவர் நண்பர்களையும் தொழிலகத்து உழைக்கும் கரங்களையும் அணைக்கும் தினமாகும். இத்தகைய நன் னுளிலே அமரர் தாபகர் நினைவாக நூற்சுவடியொன்று வெளி வருவது வழக்கமாயுள்ளது.

இம்முறை ஈழத்திருநாட்டின் இணையில்லா ஈஸ்வரங்களுள் முன்தோன்றி மூத்த ஈஸ்வரமா யுள்ள முன்னேஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள அன்னை வடிவாம்பிகாதேவியின் வசந்த நவ ராத்திரிப் பெருவிழா நிகழ்ச்சியைக் கருதும் வண்ணம் யாழ். வளாக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் எழுதியுதவிய சிறு சுவடி யொன்று தொழிலதிபரால் வெளியிடப்பெற்று விநியோகிக்கப்பெற்றது



அறுநூற்றுக்கு அதிகமான கேகாலை மாணவர்களைத் தொழி லதிபரும் மனைவியாரும் தங்கள் மனையில் மங்களகரமாக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

மில்க்வைற் செய்தி வாசக
அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
எமது ரௌத்திரி புத்தாண்டு
வாழ்த்துக்கள்

★ எதிலும் முயற்சிக்கு ஏற்ற முன்னேற்றம் உண்டு ★

உ






## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருவாரூர் — திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆடலு கந்துடன் கூத்தராய்
அக்கி ஞேடர வார்ப்பரா ரூரரே.

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்த் தியாகேசப் பெருமானனவர் கொக்கரை குழல், வீணை, கொடுகொட்டி ஆகிய வாத்தியங்களை இசைத்து மருங்கிலே சூழ்ந்து நின்று பிளந்த வாயை யுடைய பூதங்கள் ஆடிவர தாம் பெருங் கூத்தாடுபவ ராய் உருத்திராக்க மணிமாலையையும் பாம்பையும் பூண்டு வருவார்.

### திருவாரூர்ப் பெருமான்

திருவாரூர்ப் பெருமானின் திவ்ய திருநாமம் தியா கேசர் என்பதாகும். அவர் பந்தமும் வீடுமாயுள்ளவர். தொண்டுசெய்து துதித்து வருவோருக்கு அண்டங்களை ஆண்டனுபவிக்கக் கொடுத்தருள்பவர். அன்பர்க்கு அன்ப ரானவர். தக்கன் செய்த தவருன வேள்வியைத் தகர்த் தவர். தேவர்களுக்கு முதல்வர். அவர் கங்கையைத் தரித் தவர். நீலகண்டத்தையுடையவர். பாம்புகளை அணிந்த வர். வேதியர், வள்ளல், அண்டவாணர், கையிற் சூல முடையவர்.


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானேர் பின்வருவன வற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


## வரைவின்மகளிர்

### பொதுமகளிர் இயல்பு

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

தனக்கு வரக்கூடிய பொருளை நினைத்துப் பார்த்து அதற்கு ஏற்ப இனிய சொற்களைக்கூறி வரவேற்கும் பெண் களின் நடத்தையை அறிந்து அவரோடு பொருந்தாமல் விடல் வேண்டும்.

**Prostitutes**

The women without character think of the wealth and talk sweet till that is got, Consider their character and avoid their company.

## ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்


| | | | |
|---|---|---|---|
| 3 | வியாழன் | — | பெரியவியாழன் |
| 4 | வெள்ளி | — | பெரியவெள்ளி |
| 11 | வெள்ளி | — | ஏகாதசிவிரதம் |
| 12 | சனி | — | சனிப்பிரதோஷ விரதம் நீர்வேலி கந்தசாமி கொடி |
| 13 | ஞாயிறு | — | ரௌத்திரி வருடப்பிறப்பு மருதடி தேர் |
| 14 | திங்கள் | — | அமாவாசை விரதம் |
| 15 | செவ்வாய் | — | வண் - காமாட்சி கொடி |
| 17 | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 21 | திங்கள் | — | நல்லூர் கைலாசபிள்ளையார் கொடி |
| 25 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 26 | சனி | — | திருநெல்வேலி சிவன் கொடி |
| 27 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 29 | செவ்வாய் | — | சித்திரைப் பூரணை |

## சபாபதி நாவலரும் பெரியபுராணமும்

வடக்குக் கோப்பாயைச்சேர்ந்தவரும், சிதம்பரம் நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியராய் இருந்தவரும், திருவாவடுதுறை ஆதீனத்தில் மகாவித்துவானய் இருந்து நூலாராய்ச்சி செய்தவருமான சபாபதி நாவலரவர்கள் தாம் இயற்றிய திராவிடப் பிரகாசிகை என்னும் நூலில் பெரியபுராணத்துக்கு அதிக சிறப்புக் கொடுத்துள்ளார்கள். அன்றி பெரியபுராணத்துக் கடவுள் வாழ்த்துக்கும் நீண்டதொரு விரிவுரை எழுதியுள்ளார். இஃது அவர் பன்னிரண்டாண்டுகள் திருவாவடுதுறையில் மகாசந்நிதானத்தின் அன்புக்காளாயிருந்து ஞான நூல்களை ஆராய்ந்ததன் பயன் என்பர்.

★ மனவமைதி உண்டானல் மேன்மையுண்டாகும் ★

# பஞ்சதந்திரம்



எவ்வளவுக்கெவ்வளவு எஜமானன் வேலைக்காரருக்குச் சலுகை கொடுக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த வேலைக்காரரிடம் அபிமானமும் அடக்கமும் நன்றியறிதலும் விசுவாசமும் இருந்தால்தான் எஜமானன் சோபிப்பான்.

நிலைகுலைந்து போனாலும் பெரியோர்கள் தைரியத்தைக் கைவிடுவதில்லை. கரையில் பெரும் பள்ளங்கள் உண்டானாலும் கடலின் கம்பீரம் குறைகிறதில்லை.

அற்பவிஷயத்துக்குக்கூட நீசர்கள் நிலைமாறுகின்றனர் மெல்லிய காற்று வீசினாலும் நாணற்புல் குனிந்து கொடுக்கிறது.

அரச நீதியில் ஆறுமார்க்கங்களையும், நான்கு உபாயங்களையும் அறியாமல் மந்திரி உத்தியோகத்துக்கு உடன்படலாகாது.

பொய் வார்த்தைகளை அழகாக அடுக்கடுக்காகக்கூறி இல்லாதவற்றைப் பிரசாரஞ் செய்யும் வீரர்களை விட்டு வீரலட்சுமி நீங்கிவிடுவாள். பின்னர் வீரம்பேசிய எத்தனையோபேர் வீதிவழியே திரியவேண்டிவரும்.

மூட்டாளுக்கு உபதேசஞ் செய்தாலும் மூடக்குணம் நீங்காது. யோக்கியமில்லாதவனுக்குக் கல்வியாலாம் பயன் கிடையாது.

பிள்ளைகள் நான்கு வகையினர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஜாதன், அனுஜாதன், அபிஜாதன், அபஜாதன். தாய்போல குணமுள்ளவன் ஜாதன். தந்தைபோற் குணமுள்ளவன் அனுஜாதன். நல்ல குணமுள்ள மேலோன் அபிஜாதன். கீழோனுக்குக் கீழானவன் அபஜாதன்.

கண்ணுக்கு அழகாயிருப்பவனைக் காண்பது சுலபம்; அறிவுள்ளவனைக் காண்பது துர்லபம்.

## சாரணீய தாபகர் தினவிழா

மேற்சொன்ன விழா 12-3-80 புதன்கிழமை விக்ரோறியாக் கல்லூரியில் விமரிசையாகக் கொண்டாடப் பெற்ற வேளையில் சாரணர்கள், மில்க்வைற் தொழிலதிபரின் சேவையைப் பாராட்டி அவருக்குச் சேவை விருது வழங்கிக் கௌரவித்தார்கள்.

# பேரூராதீன மடாதிபதி அவர்கள்
## மில்க்வைற் தொழிலதிபரின் தொண்டுகளைப் பாராட்டுகிறார்

தமிழ் நாட்டிலுள்ள கோயம்புத்தூர் பேரூராதீன மடாதிபதி அவர்கள் பன்முகப் பணிகளில் ஈடுபட்ட பெரியார். அவர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி முதல்வராயும், உயர்நிலைப் பள்ளியின் தாளாளராயும், தமிழ்நாடு தெய்விகப் பேரவை உறுப்பினராயும், தமிழகப் புலவர்குழு உறுப்பினராயும், பேரவைப் பதிப்பகத் தலைவராயும், தமிழ் மாநில அருள்நெறித் திருக்கூட்டத் துணைத் தலைவராயும் இன்னும் பல துறைகளில் தோள் கொடுப்பவராயும் தொண்டு செய்யும் பெரியார்.

அடிகளார் ஈழநாட்டுக்கு எழுந்தருளி இங்குள்ள இடங்களைப் பார்த்தபின் மில்க்வைற் தொழிலகத்துக்கும் வருகைபுரிந்து தொண்டுகளை நேரிற்கண்டு ஆனந்தமுற்று ஆசிவழங்கினார். அது போதாதென்று தம்மிடம் திரும்பிய பின்னர் மிகவும் உருக்கமாக எழுதியனுப்பிய வாழ்த்து, தொண்டு செய்வோரின் தோழமை நெறியை வளர்ப்பதாக இருப்பதால் அதனைப் பிறரும் அறியுமாறு தருவதில் புகழ்ச்சியாகாது.

''ஈழவள நாட்டின் இனிய நற்பண்பும் அன்பும் நல்லுணர்வும் ஆக்கமும் பெருகத் தோழமை நெறியில் தொண்டு செய்து நாட்டின் நலமும் மக்களின் வாழ்வும் ஈட்டிய நிதியால் ஏற்றமுற்றிடவே வழங்கிச் சைவ மரபு காத்தினிய மனையறந் தழைக்க வாழ்வாங்கு வாழும் கனகராச;

கருத்தும் பணியும் ஏட்டினிற் கண்ட எமக்கு நேராக வீட்டினில் கண்டு விருந்தாய் அன்பர் கூட்டத்துடனே பேசி மகிழக் கூடிற்றதனால் குளிர்ந்ததெம்முளம்.

இல்லத்தலைமதியும் இனிய நற்பண்பும் தெளிந்த சிந்தையுடன் செய்யும் நற்பணியும் அறிந்து மகிழ்ந்தோம் அன்பரீர் வாழ்க!

மில்க்வைற் நிறுவனம் வியத்தகு நிறுவனம் கல்விச் சாலை, கவின் நிறைகூடம், சைவத் தெய்வத் தமிழ் நிறை கோயில், ஆய்வுச்சாலை அறப்வளர் சாலை, வளர்க வையகம் பேணி வளர்கவே.''

## வஜ்ஜிரமிர்தம்
### சுவாமி கெங்காதரானந்தா

உனது இதயத்தைத் தூய்மைப் படுத்தினால் சிந்தனா சக்தியும் செயலாற்றும் திறமையும் அற்புதகரமான ரீதியில் பெருகும்.

நீ தெய்வத்தைப் பார்க்கவில்லையென்றாலும் தெய்வம் உன்னைப் பார்க்கிறது.

கண்கள் உலகத்தைப் பார்க்கும் சக்தியை இழந்தாலும், தெய்வத்தைப் பார்க்கும் சக்தியை இழப்பதில்லை

உன் மனக்குற்றம் மற்றவர்களின் குற்றமாகத் தோற்றமளிக்கிறது.

அழுக்காறு நீக்கியபின் செய்யுந் தொண்டுதான் தொண்டு

★ பணியப் பழகினவன் ஆளப்பயின்றவனாவன் ★



## ஒளவை அருந்தமிழ்

### 3. உப்புக்கும் புளிக்கும் பாடுதல்

சோழ மன்னனின் அத்தாணி மண்டபத்திலே மந்திரிமார், புலவர்கள், சோதிடர்கள் இருந்த ஆசனங்களிலும் உயர்ந்த ஆசனத்தில் ஒளவையார் இருந்தார். அவருடைய தோளில் ஒரு பை தொங்கியது. அதற்குள் என்ன இருக்கிறது என்று அறிவதற்குச் சோழவேந்தன் விரும்பினான்.

''பாட்டி! நீங்கள் அரசர்க்குரிய பெரிய சபையிலே இணையில்லாத ஆசனத்தில் இடம்பெற்றிருக்கிறீர்கள்; கேவலம் நாடோடியாகத்திரியும் குறப்பெண்ணின் முடிச்சுப் பைபோல நீங்களும் தோளில் ஒரு பையைத் தொங்க விட்டுள்ளீர்கள். அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று அறிவதற்கு ஆசையாய் இருப்பதால், என்ன என்று கூறுவீர்களா?'' என்று கேட்டான்.

குழந்தைகள் அது என்ன. இது என்ன என்று விடுப்பூக்கத்தில் வினவும்போது விடைகூறும் தாயின் மனப்பான்மையில். ஒளவையார் மன்னனைப் பார்த்தார்.

'சோழமன்னனே கேட்பாயா! கூழைப்பலாத் தழைக்க நான் பாட்டுப் பாடியபோது குறப்பெண் மூன்று உழக்கும் ஒரு உழக்குமாக அளந்து ஒருகொத்துத் தினை தந்தாள். வேறு இடங்களில் ஏழைகள் மத்தியில இப்படியே பாட்டுப் பாடியபோது ஒருத்தி உப்புத் தந்தாள், இன்னொருத்தி புளியுருண்டை தந்தாள். அவர்கள் எல்லோரும் அன்புடன் தந்தவற்றைக் கைவிடாமல் கொண்டு திரிகிறேன் பார். என்று பண்டங்களைக் காட்டியவாறே தம் பண்பாட்டை விளக்கும் செந்தமிழ்ப்பாட்டையும் பாடினர்.

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள் — சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம்.

---

## பங்குனி மாதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள்

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையில் நடைபெற்ற பொருட்காட்சி விழா மூன்று நாள்கள் நடைபெற்றன. இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குக் கௌரவ விருந்தினராகச் சென்ற தொழிலதிபர் கனகராசா அவர்கள் மங்கல விளக்கேற்றி வைத்தார்கள்.

---

## மில்க்வைற் தொழிலகம்
## புத்தாண்டு வாழ்த்து

மில்க்வைற் தொழிலதிபர், தொழிலாளர் தங்கள் ஆதரவாளர் விற்பனையாளர் வாடிக்கையாளர் எல்லோருக்கும் தங்கள் இதயம் கலந்த புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவிக்கிறார்கள். நாடு செழிக்க நாமனைவரும் தோள் கொடுத்து முயற்சிசெய்து உழைப்போமாக.

சுபம்

---



*Moral Lessons for Children*

## Become a Good Boy

— *Swami Sivananda*

*Dear Child!*

Do not fight with your brothers and class-fellows. Obey your parents and teachers. Do not smoke. This is a bad habit. You will get desease from smoking. Give up bad company.

Do not use vulgar words. Do not abuse any-body. Be kind to all. Serve all. Love all. Respect elders. Do not steal anything. Do not hurt anybody. Speak gently. Speak sweetly. Be punctual in your school.

Study your daily lessons well. Stand first *in* the class. Do not play much. Do not waste time.

---

முற்றொடர்:

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| சோபனம் | — | அழகு, வாழ்த்து, நலம் |
| சோபை | — | ஒளி |
| சோபானம் | — | படிமுறை |
| சோபித்தல் | — | விளங்குதல் |
| சோமன் | — | திங்கள், மதி |
| சோமவாரம் | — | திங்கட்கிழமை |
| சோரம் | — | களவு, வஞ்சனை |
| சோலி | — | வேலை, தொழில் |
| சௌகரியம் | — | நலம், எளிது |
| சௌக்கியம் | — | நலம், மகிழ்ச்சி |
| சௌசம் | — | துப்புரவு |
| சௌந்தரம் | — | அழகு |
| சௌரம் | — | மயிர் நீக்குதல் |

★ மக்கள் அடையும் பண்பாடு நாட்டின் செல்வம் ★

# தாயார் பாடிய தாலாட்டு

தனத்தில் சுரந்த பாலைக் குழந்தைக்கு ஊட்டியபின், மனத்தில் சுரந்த தாலாட்டைத் தாயார் மெதுவாகப் பாடினாள். நேற்று முன்தினம் புழுதிபடிய விளையாடித் திரிந்த சிறுமியா இவள். ஆம் ஆம். இவள் இன்று தாய். தாய்மைக் குணம் தன்னியல்பில் வருவதை நாய் பூனையிலும் பார்க்கலாம். ஆனால் இது அவற்றுக்கெல்லாம் மேம்பட்ட படைப்பு. இவள் பாடிப் பாடிக் குழந்தையை நித்திரையாக்குவதோடு நல்ல மனிதனாக உருவாக்கவும் வல்லவள். எனவேதான் தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரையும் என்று நீங்கள் சொன்னாற்போல வெள்ளையனும் தொட்டிலை ஆட்டுங்கை உலகை ஆளும் கை என்றான்.

தாலாட்டுப் பாடல் வெறும் பாடலல்ல. அதில் தாய்கிடந்த தவம், அவள் செய்த தியாகம் எல்லாம் சுவறிக்கிடக்கும். செடி கொடிகள் பூத்தாற்போல அவளும் பூத்துக் கனியாக்கியதே இது. இதில் ஒரு கனிவு.

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ - என்
கண்ணாரோ ஆரிவரோ!
எட்டாத கோயிலுக்கு
எட்டி விளக்கேற்றி
தூரத்துக் கோயிலுக்குத்
தூண்டா விளக்கேற்றி
திங்கள் முழுகித்
திருத்தணிகை போகையிலே
திருத்தணிகை முருகரவர்
திருவுளத்திற் கொண்டாரோ?

தாய் தான் கருத்தரித்துப் பத்துமாதம் பாடுபட்டுச் சுமந்து பெற்ற பூரிப்பை எல்லாம் ஏன் உங்களுக்கு, பிள்ளை பிறந்தது, ஆசாரியை அழைத்துத் தொட்டில் செய்துவா என்றார் அப்பா. தொட்டில் வந்தது அந்தக் காலத்து மரவேலை செய்பவர் நாளொன்றுக்கு எட்டுத் தேர் செய்ய வல்லவர். வைகல் எண்தேர் வலித்த அவர் புகழைப் புறநானூறு புகழுகின்றது.

சதுகிரி மலையேறிச்
சாதிலிங்கக் கட்டை வெட்டிச்
சேர்த்துப் பணிப் படுத்திச்
சித்தி ரத்தால் ஒப்பமிட்டு

தொட்டில் வந்தது. அதனழகு பெரிது. சித்திரங்கள் மிகப்பல. அன்னங்கள், புறாக்கள், தாராக்கள், கிளிகள் சித்திரங்களில் அமைந்தன. சிவபெருமான் முதலாகத் தேவர்களும் அதிலே உருப்பெற்றெழுந்தருளியிருந்தனர். கண்ணுறங்கும் குழந்தையைக் காப்பதற்குத் திருவைந்தெழுத்தும் செதுக்கப் பெற்றிருந்தது. ஆசாரி நல்லவர் யோக்கியர்: அவருக்குச் சன்மானம் அபாரம்.

அடித்ததோர் ஆசாரிக்கு
அளித்ததென்ன வெகுமானம்?
கிண்ணியிலே சந்தனமும்
கிளிமூக்கு வெற்றிலையும்
பொன்னாரம் முத்தாலே
புதுக்காப்பும் சங்கிலியும்
கழுத்துக்குத் தங்கவடம்
காதுக்குப் பொற்கடுக்கன்

தோளுக்குப் பொன்னுருமால்
துப்பட்டா பட்டாலே
அரைக்கு அரைஞாணும்
அடித்தகைக்கு மோதிரமும்
இந்த வெகுமானம்
இவ்வுலகில் கண்டதில்லை!
போதுமென்று சொல்லிப்
போய்விட்டார் ஆசாரி.

இனி, தொட்டிலசைகிறது. அதன் அமைப்பிலுள்ள அழகெல்லாம் புலனாகின்றது.

தொட்டிலுமோ பொன்னாலே
தொடுகயிறோ முத்தாலே
பட்டாலே தொட்டிலாம்
பவளக் கொடிகயிறும்
தொட்டில் அலைந்துவரத்
தொட்டிற் கால் நின்றிலங்க
ஆடுமாம் தொட்டில்
அசையுமாம் பொன்னூணி
ஓடுமாம் தொட்டில்
உயருமாம் பொன்னூணி

இங்ஙனம் தொட்டிலசையக் குழந்தை மெதுவாக அயர்ந்து உறங்கத் தொடங்குகிறான். தாயார் அமைதியாக அவ்விடம் விட்டு அகன்று வேறு அலுவல்கள் பார்க்கவேண்டும். ஆகவே பிள்ளையைத் தனியேவிட்டுப் பிரிய மனம் வராமல் அன்னம் தாரா கிளி ஆகிய பறவைகளை நோக்கித் தன சுந்தரனுக்குத் துணையாவார் யாவர் எனப் பறவைகள் பதில் கூறுவதாகப் பாவனை.

செந்தில் வடி வேலவனார்
திருச்செந் தூர்ச் சண்முகனார்
வந்துதுணை யிருப்பார் — உன்
வரிசை மகன் பக்கத்திலே
கூடத்துணை யிருப்பார்
குழந்தைவடி வேலரவர்
சாரத் துணையிருப்பார்
சந்திரரும் சூரியரும்
பக்கத் துணையிருப்பார்
பார்வதியும் ஈசுரரும்
அருகே துணையிருப்பாள்
அம்மை உமையவள் தான்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

★ பிறர்மீது குற்றம் காண்பவன் தானே குற்றவாளி ★

# ரௌத்திரி வருடப்பிறப்பு

கலியுகம் 5032, சாலிவாகனசக 1903 எனக் கணிக்கப் பெற்ற கி. பி. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 11-05 மணியளவில் உத்தரட்டாதி முதலாம் பாதத்தில் ரௌத்திரி வருடம் பிறக்கிறது. அன்று காலை 7-05 முதல் மாலை 3-05 வரை விஷு புண்ணிய காலமென்பர்.

இவ்வேளையில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து நீராடி இறைவனை வழிபட்டுச் சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்து பெரியோரை வழிபட்டு நல்லன செய்வார்களாக என்று பெரியோர் விதித்துள்ளார்கள்.

## உங்களுக்குத் தெரியுமா எந்த ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்தது என்று

1. ரூபா சத முறை நடைமுறைக்கு வந்தமை 1872
2. கொழும்பில் காஸ்லையிற் ஒளி செய்தது 1872
3. லிபரியா கோப்பியினம் பயிரிடப்பட்டது 1873
4. சிங்கோனுப்பட்டை முதலில் விலைபெற்றது 1874
5. சட்டசபையினருக்கு கௌரவ எனும் பெயர் வழங்கியது 1875
6. கொழும்பு நூதனசாலை ஆரம்பமானது 1877
7. கொழும்பு மொறட்டுவா புகையிரதச் சேவை 1877
8. தொலைபேசிக் கருவி வந்தமை 1878
9. சேர் முத்துக்குமாரசாமி மறைந்தமை 1879
10. சேர் இராமநாதன் சட்டசபைப் பிரதிநிதியானமை 1879
11. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மறைந்தமை 1879
12. தேயிலையை உலர்த்தும் இயந்திரம் வந்தமை 1882
13. றிக்சோவண்டி இழுவைக்கு வந்தமை 1883
14. முதல் முறையாகத் தேயிலை பகிரங்க ஏல விற்பனை 1883
15. விவசாயப் பாடசாலை ஆரம்பிக்கப்பெற்றது 1884
16. தமிழ் சிங்கள முஸ்லிம் புதுவருட நாள்கள் விடுதலை தினங்களானமை 1884
17. கொழும்பு லபுகம நீர்த்தேக்கம் நிரப்பப் பெற்றது 1886
18. லண்டனில் இலங்கையர் சங்கம் ஆரம்பமானது 1888
19. ஆறு றாத்தல் இரத்தினக்கல் அகப்பட்டது 1889
20. கத்திக்குத்து பெருங்குற்றமாகக் கணிக்கப் பட்டது 1890

எப்பொழுதும் பணிசெய்யச் சித்தமாயிரு. சந்தர்ப்பத்தை நழுவவிடாதே, ஆத்ம பாவத்துடன் சேவைசெய்.

— சுவாமி சிவானந்தர்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தாயார் பாடிய தாலாட்டு

நடுவே துணையிருப்பார்
நாரணரும் பிருமாவும்
சேர்ந்து துணையிருப்பார்
சிவனும் பெருமாளும்.

காவலாளர் காப்பாளர் வேலைமாற்று முறையில் காலை, மாலை, சாமம் என வந்துநின்று போகும் நேரசூசியும் இல்லாமற் போகவில்லை. 'வேக்சிவ்ற்' நல்ல முறையில் அமைந்துள்ளது.

காலைத்துணை வருவார்
கணபதியும் வல்லபையும்
மாலைத் துணை வருவார்
மயிலோனும் வள்ளியரும்
அந்தித் துணைவருவார்
அரனும் ஈசுவரியும்
சாமத்துணை வருவார்
சந்திரரும் சூரியரும்.

உஷ்! குழந்தை நன்ருக உறங்குகிறது. குழப்பாதீர்கள்.

ஆதாரம்; மு. அருணசலம்

## அமைதிக்காலத்தில் நெப்போலியன் செய்த அபிவிருத்திகள்

நெப்போலியன் பொனபாட் என்றதும் யுத்த தளபதி என்றே பலர் கருதுகிருர்கள். அவன் செய்த யுத்தங்களிலும், அவன் கைப்பற்றிய நாடுகளிலும், அவன் அமைத்த பேரரசிலும் பார்க்க அவனுக்கு நிலையான புகழைக் கொடுத்தவை அவன் அமைதிக் காலத்தில் செய்தளித்த ஆக்கவேலைகளும் அபிவிருத்தித் திட்டங்களுமேயாம்.

பிரான்சிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் தொழில், வர்த்தகம், விவசாயம், போக்குவரத்துச் சாதனம், நகரவமைப்பு என்பனவற்றைத் திறம்படத் திட்டமிட்டுச் செய்த நெப்போலியன் அவற்றையே தன் திரவியங்கள் எனக் கூறினுன்.

தலைசிறந்த சட்டநிபுணரைக்கொண்டு தானே நேரிற் பங்குபற்றித் தயாரித்தளித்து நாடுகளிற் பரப்பிய தண்டக்கோவை அவனுக்கு அழியாப் புகழைக் கொடுப்பதாயிற்று.

யுத்தங் காரணமாகக் கோப்பி இறக்குமதி செய்ய முடியாதபோது அதற்குப் பதிலாக சிக்கொறியும், கரும்புச் சீனிக்குப் பதிலாக பீட்கிழங்குச் சீனியும், தானியத்துக்குப் பதிலாக உருளைக்கிழங்கும் நெப்போலியன் புகுத்திப் பழக்கி அபிவிருத்தி செய்தவைகளாகும்.

இன்னும் துறைமுகவபிவிருத்தி வீதிகள், கால்வாய்கள் அபிவிருத்தி என்றின்னோரன்ன பலவும் நெப்போலியன் செய்த சேவைகளேயாம்.

★ சிரமப்படாமல் நல்லதைச் செய்யமுடியாது ★




## மூலிகை மர்மம்

### கரிசாலை

இதைக் கரிசலாங்கண்ணி என்றும், கையாந்தகரை என்றும், கரிசாரி என்றும், கரிப்பான் என்றும் பிருங்க ராசா என்றும் கூறுவர். இது ஈரமுள்ள இடங்களில் நன்கு வளருமாயினும், புன்செய் நிலங்களில் உண்டாகும் கரிசாலையே மிகவும் சிறந்தது என்பர்.

கரிசாலையில் உள்ள அயச்சத்து எங்கள் இரத்தத்தோடு விரைவிற் கலக்கக்கூடியது. அனீமியா எனப்படும் பாண்டு ரத்தவீனம் என்னும் நோய்க்குக் கரிசாலை கைகண்ட மருந்து. இம்மூலிகையைக் கருப்பேற்றி உண்ணல் வேண்டும் என்பது விதி. கரிசாலைச் சூரணத்தை ஒருவருட காலம் உண்டால் நரைத்தமயிர் கறுக்கும், திரைந்த தோல் இறுகும். காயசித்தி உண்டாகும்.

### கரிசாலைப் பானம்

கரிசாலை வேர்களை நீக்கிவிட்டு எஞ்சிய பாகத்தை உரலிலிட்டு இடித்துப் பிழியும்போது ஒழுகும் கறுப்பு நிறச் சாற்றுக்குச் சீனி கலந்து கலக்கி அடுப்பிலிட்டுக் காய்ச்சுக. பாகு பதமாக வரும்போது இறக்கிச் சிறிதளவு பச்சைக் கர்ப்பூரமும், வறுத்த மிளகுப்பொடியும், சிறிதளவு குங்குமப் பூவுமிட்டுக் கலக்கிப் போத்திலில் அடைத்து வைத்துக்கொண்டு காலை மாலை ஒரு தேக்கரண்டி பாணியில் நீர்விட்டுச் சர்பத்போலப் பருகலாம்.

### கரிசாலை சூரணம்

கரிசாலையின் வேர்களை நீக்கி எஞ்சியவற்றை நன்றாகக் கழுவி நிழலில் உலர்த்தி இடித்து எடுத்துக் காலை மாலை தேனும் நெய்யும் கலந்து வசதியானால் கீழ்க்காய் நெல்லிச் சூரணமும் கலந்து உண்டால் சுகமுண்டாகும். அழகுண்டாகும்.

"பொற்றலைக் கையாந்தகரை பொன்னிறமாக் கும்முடலைச்
சுத்தமுறக் கட்டும் சுரங்கெடுக்கும் — சிற்றிடையாய்
சிந்தூரம் செயலாகும் சிந்தைதனைத் துலக்கும்
முந்திவரு குன்ம மொழிக்கும்."

## சென்ற நூற்றுண்டில் தானியவரி

மூவேந்தர் காலத்திலும் அதனை அடுத்துவந்த காலத்திலும் தமிழ் நாட்டில் ஆறிலொருபங்கு வரிவிதிக்கப்பட்டது. இதைக்கொண்டு மன்னர் குடிகளுக்கு வேண்டிய அளவு பாதுகாப்பினையும் வசதிகளையும் செய்து வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் பல வருடங்களாகப் பத்திலொரு பகுதி வரியாக விதிக்கப்பட்டது. இதனால் நெல், வரகு, சாமை, தினை, குரக்கன், பயறு முதலியவற்றின் விளைவு வெகுவாகப் பாதிக்கப்பட்டது. குடிமக்கள் வெயர்வைசிந்தி உடலுழைப்பால் விளைவித்த தானியங்களின் பெரும்பகுதி வரியாகத் திரட்டப்பட்டது.

அன்றி வரிதிரட்டவந்த தரகர்களும் உத்தியோகத்தர்களும் தம்மனம் போனபோக்கில் பத்திலொன்றோடு கந்துக்கொன்று, களத்துக்கொன்று, சும்மா ஒன்று சுமை கூலியொன்று, வந்ததுக்கு ஒன்று, போனதுக்கு ஒன்று என்று மேலும் பலவிதமாக வசூலித்து உபத்திரவஞ் செய்தனர்,

இந்தவகையில் பொதுமக்கள் துன்பமுற்றதை அறிந்த ஜோர்ஜ்வால் என்னும் ஆங்கிலேயப் பிரதிநிதி சட்டசபையில் வன்மையாகப் பேசி இந்தக் கொடிய தானிய வரியை 1892ஆம் ஆண்டில் நீக்கினர்.

## அறிந்து பாருங்கள்

| எனப்படுவது | | எது |
|---|---|---|
| பாம்பில்லாத நாடு | .... | அலஸ்கா |
| பரிசுத்த நாடு | ........ | பாலஸ்தீனம் |
| வெள்ளையானை நாடு | ........ | சீயம் |
| சூரியோதய நாடு | ........ | யப்பான் |
| காதே நாடு | ........ | சீனு |
| லாமா நாடு | ........ | தீபத் |
| ஆயிரம் ஏரிகள் நாடு | ........ | பின்லாந்து |
| மேப்பிள் நாடு | ........ | கனடா |
| பாரத நாடு | ........ | இந்தியா |
| புனித பூமி | ........ | பாக்கிஸ்தான் |
| பரத கண்டம் | ........ | இந்தியா |
| நாவலந் தீவு | ........ | இந்தியா |
| உம்பர் நகரம் | ........ | உரோமாபுரி |
| மாளிகை நகரம் | ........ | கற்கத்தா |
| சாம்ராச்சிய நகரம் | ........ | நியூயோர்க் |
| இத்தாலியின் அழகிய நகரம் | | நேப்பிள்ஸ் |
| மரங்கள் இல்லாத தீவு | ........ | மால்ரா |
| இந்தியாவின் நந்தவனம் | .... | பீகார் |
| இந்தியாவின் நுழைவாயில் | | பம்பாய் |
| நாகரிக நகரம் | ........ | பாரிஸ் |
| தேள் இல்லாத நாடு | ........ | நியூஸிலாந்து |
| பொன் நகரம் | ........ | கலிபோனியா |
| கம்பளி நாடு | ........ | அவுஸ்திரேலியா |
| சந்நியாசி அரசு | .... | கொறியா |
| உலகத்தின் முகடு | .... | பாமீர் |

## அருணசலேசுவரரின் திருவிளையாடல்

அருணசலேஸ்வரரின் திருவிளையாடல் ஒன்று, இயற்பகைநாயனரின் வரலாற்றை நினைவுபடுத்துவது. வல்லாளன் என்னும் மன்னனுக்கு இரு மனைவியிருந்தும் மகப்பேறில்லாமையால் மனம் வருந்தினன். தான தருமஞ் செய்து அவற்றின் மகிமையால் மகப்பேறு பெற விரும்பியவன். வந்தவர்க்கெல்லாம் இல்லையென்னது ஈந்து

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

★ தனக்கெனத் தேடிக்கொள்வது அசுர இயல்பு ★



## விவேகானந்தர் நினைவுகள்

□

## பாலைவனப் பசுந்தரை

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெரிய விடயம்பற்றிப் பேசிய பின்னர், அக் கல்லூரியில் அக்காலத்தில் எம். ஏ. வகுப்பில் படித்த மாணவர்கள் சுவாமிகளைக் குதிரை வண்டியிலேற்றித் தாமே இழுத்துச் சென்றனர். அவர்களுள் தில்லைநாதர் கந்தையா என்பவரும், ஆறுமுகம் கந்தவனம் என்பவரும் இருவர். இவர்களுள் கந்தவனம் என்பவரே பிற்காலத்தில் சின்னக்குட்டி மணியகாரன் எனப் பெயர்பெற்ற பெரியாராவர்.

மாணவர்கள் சுவாமிகளைக் கொழும்புத்துறையை நோக்கி இழுத்துச் சென்றவழியில் பறங்கித் தெருப் பக்கமெங்கும் வைதிகப் பொலிவைக் காணாது வாடிய முகத்தோடிருந்த சுவாமிகள் கொழும்புத்துறைக்கு அண்மையில் உள்ள ஒரு முச்சந்தியில் நிழல் மரங்களையும், ஒரு சைவப் பாடசாலையையும், அமைதியான ஒரு கோயிலையும் கண்டார். அவருக்கு உள்ளெழுந்த வேகம் உணர்ச்சிப் பெருக்கை ஊட்டியது. உடனே வண்டியை விட்டுக் குதித்து அங்குமிங்கும் பார்த்து இந்த இடம் ஒரு பாலைவனப் பசுந்தரைபோல இருக்கிறது என்னும் பொருட்பட ஆங்கிலத்தில் கூறினார்.

அந்த இடம் வேறு எதுவுமில்லை. அதுவே இன்று யோகசுவாமிகள் வீதிச் சந்தியாய் விளங்குகின்றது. ஆயிரக்கணக்கானோரின் ஆன்மீக ஈடேற்றப் பாதையில் மைல் கல்லாய்த் தங்கும் இடமாய். யோகபலம் ஊட்டுந் தானமாய் மௌனம் பழக்குமிடமாய் குருவடிவைக் காட்டிய குருந்தை மர நிழலாய் விளங்கிய இடம் அதுவே அந்த இடத்தைப் பாலைவனப் பசுந்தரையாக்குவதற்கு எங்கிருந்தோ யோகசுவாமிகள் அங்கே வந்துறைந்தார். பெரியவர்கள் வாக்குப் பொய்ப்பதில்லை.

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அருணாசலேசுவரரின்........

வந்தான். ஒருநாள் துறவியர் ஒருவர் வந்து தமக்கு விலைமாது ஒருத்தி வேண்டும் என்றார். அந்நகரத்திலுள்ள விலைமாதர் யாவரும் வேறு பலருக்குட் ஆட்பட்டிருந்தமையால் அன்றிரவு விலைமாது கிடைக்கவில்லை. எனவே மன்னனின் இளைய ராணி தானே துறவிக்கு இன்பங் கொடுப்பதாக முன்வந்தாள். ஆனால் அவள் துறவியை அணுகிய போது அவர் குழந்தையாகிவிட்டார். அந்தத் தெய்வீகக் குழந்தையும் உடனடியாக மறைந்தபின், அருணாசலேஸ்வரரே தாம் மன்னனுக்கு மைந்தனாக இருப்பதாகக் கூறினார். அதனால் மன்னன் பலவிதமாகத் திருக்கோயிற் பணிபுரிந்தான்.





மில்க்வைற் தயாரிப்புக்களில் ஒன்றான

நீம் சோப்

நீராடும்போது உபயோகிக்கத் தயாரிக்கப்பட்டது
சுத்தமான வேப்பெண்ணெய்
கலந்து செய்யப்பட்டதால்
தேக ஆரோக்கியத்துக்கு அருமையானது.
நுரைவளம் உள்ள

நீம் சோப்

தோலில் அழுக்குகளை நீக்குவதோடு
தேமல், சொறி முதலியனவற்றையும் நீக்குவது,
நறுமணம் உள்ளது.


## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

யோகாசனம் செய்ய விரும்பும் பெண்களும் யோகாசனத்தைப்பற்றிய அறிவுரைகளைக் கேட்க விரும்பும் பெண்களும் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சச்சிதானந்தர் சிறுவர் இல்லம்
உடுவில், சுன்னாகம்,

---

உனது ஆத்மீக லக்ஷியத்திற்கு முரணான, சம்பந்தமற்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆசை கொள்ளாதே. உணவு, தேகம், உறவினர் முதலிய அநாத்ம விஷயங்களைச் சிந்தனை செய்யாதே. எப்பொழுதும் ஆத்மாவையே சிந்தனை செய். அப்பொழுதுதான் இப்பிறவியிலேயே ஆத்மாவை அறியும் வாய்ப்பைப் பெறுவாய்.

— சுவாமி சிவானந்தர்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-4-80.